# யா/ புற்றளை மகா வித்தியாலயம்

# பரிசில் நாள்

## 24.06.2016

## அதிபர் அறிக்கை

### முதன்மை விருந்தினர்

**உயர்திரு.க.வி..விக்கினேஸ்வரன்**

(கௌரவ முதலமைச்சர், வடக்கு மாகாணம்)

### சிறப்பு விருந்தினர்கள்

**உயர்திரு.த.குருகுலராசா**

(கௌரவ அமைச்சர்,கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை ,

இளைஞர் விவகார அமைச்சு)

**உயர்திரு.இ.ரவீந்திரன்**

(செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை ,

இளைஞர் விவகார அமைச்சு)

**திரு.சி.நந்தகுமார்**

(வலயக்கல்விப்பணிப்பாளர் வடமராட்சி,)

**திரு.S.P.சாமி**

(ஸ்தாபகர், தினக்குரல்)

### கௌரவ விருந்தினர்கள்

**திரு.கு.சிதம்பரப்பிள்ளை**

(சட்டத்தரணி. லண்டன்)

**திரு.க.ரவீந்திரன்**

(கணக்காளர், அவுஸ்திரேலியா)

# யா/புற்றளை மகா வித்தியாலயம்
# புலோலி

## பரிசில்நாள் அறிக்கை – 2015/2016

**பு**ற்றளை சித்திவிநாயகப் பெருமானின் அருளாசியுடன் 1916ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2016ஆம் ஆண்டில் 100ஆவது அகவையில் கால்பதித்துள்ள எமது பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வில் ஆசியுரை வழங்கிய மதகுருமார்களே! பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரும் வடமாகாண கௌரவ முதலமைச்சருமான உயர்திரு.சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள வடமாகாண கௌரவ கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் உயர்திரு.த.குருகுலராசா அவர்களே, கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.இ.இரவீந்திரன் அவர்களே, கௌரவ மாகாணசபை உறுப்பினர்களே, தினக்குரல் பத்திரிகை ஸ்தாபகர் திரு.S.P.சாமி அவர்களே, வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.சி.நந்தகுமார் அவர்களே, சட்டத்தரணி திரு.கு,சிதம்பரப்பிள்ளை அவர்களே, கணக்காளர் திரு.த.ரவீந்திரன் அவர்களே, இங்கு வருகை தந்துள்ள வடமாகாண கல்வியமைச்சின் அதிகாரிகளே, வடமாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகளே! வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே, கோட்டக் கல்வி அதிகாரிகளே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே, ஆசிரிய ஆலோசகர்களே, வெளிநாடுகளில் இருந்து வருகை தந்துள்ள பழைய மாணவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, இப்பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர்களே, ஆசிரியர்களே, பழைய மாணவர்களே, பெற்றோர்களே, எமது பாடசாலையில் முன்னர் கடமையாற்றிய ஆசிரியர்களே, தற்போது கடமையாற்றும் ஆசிரியர்களே, அன்புக்குரிய மாணவச் செல்வங்களே, இங்கு வருகை தந்துள்ள அனைவரையும் இந்நூற்றாண்டு விழாவின் முதல்நாள் நிகழ்வாகிய பரிசில் தின நன்னாளில் எனது அன்பு நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்து அனைவரையும் இருகரம் கூப்பி வருக, வருக என வரவேற்று 2015/2016 பரிசில்தின அதிபர் அறிக்கையைச் சமர்ப்பித்து தலைமையுரையை நிகழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்பு 1916ஆம் ஆண்டு இப்பகுதியில் வாழ்ந்த சான்றோர்களான புலோலி கிழக்கு வீரகத்தியார் பசுபதி, திரு.சி.கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை, திரு.விநாயகர் பரமு, கு.கணபதியார் நாகப்பர், திரு.கதிர்காமர் கணபதிப்பிள்ளை, திரு.சுப்பர் ஆழ்வாப்பிள்ளை, திரு.கணபதியார் ஆழ்வாப்பிள்ளை, திரு.முருகர் கந்தப்பர், திரு.சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை, திரு.கதிர்காமர் சின்னத்தம்பி, திரு.கந்தப்பர் ஆறுமுகம், திரு.வேலப்பர் கணபதிப்பிள்ளை, சின்னத்தம்பியார் வேலுப்பிள்ளை புலோலி மேற்கு திரு.சேதுநாதர் மயில்வாகனம், புலோலி கிழக்கு திரு.கந்தப்பர் சங்கரப்பிள்ளை ஆகியோர் இக்கல்விக் கூடத்தை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை கோவிற்பற்றில் புலோலி கிழக்கிலுள்ள பெரிய கக்கிலிசிட்டி என்னும் நாமம் பூண்டதும் எட்டு நிலப்பரப்பு விசாலம் கொண்டதுமான காணியோன்றில் திண்ணைப் பள்ளிக்கூடமாக புலோலி புற்றளை சாரதாபீட வித்தியாசாலை என்ற எமது பாடசாலையை ஆரம்பித்த அனைவரது பாத கமலங்களையும் மனதில் பூசித்து இந்நூற்றாண்டு நிகழ்வுகளை ஆரம்பிக்கின்றோம். இப்பாடசாலை ஆரம்பித்த இக்காணியை புலோலி கிழக்கு கணபதியார் சுப்பரும் பெண் சின்னாச்சியும் ஆகிய இருவரும் இப்பாடசாலைக்கு 1918ஆம் ஆண்டு பங்குனி 8ஆம் திகதி நொத்தாரிஸ் பரமு சிதம்பரப்பிள்ளை முகதாவில் முடிந்த 15070ஆம் இலக்க உறுதிப்படி தருமசாதனம் செய்ததுடன் பின்னர் வந்த இடர்களையும் நீக்கி பாடசாலைக்கு தருமசாதனம் வழங்கிய கணபதியார் சுப்பர் குடும்பத்தினரது பாதங்களையும் பணிந்து போற்றுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இதேவேளை பாடசாலையின் தெற்குப் புறமாக அமைந்துள்ள தோட்டக்காணியை 1972ஆம் ஆண்டு அரசு சுவீகரித்து பாடசாலைக்கு வழங்கியபோது இத்தோட்ட நிலத்தின் நட்ட ஈட்டுத் தொகைக்காக முன்னாள வடமாநிலக் கல்வி அதிபதி திரு.சி.தணிகாசலம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பிரதிநிதிகள் சபையின் உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் உறுப்பிளர் திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள் தன் தொகுதிக்கென்று ஒதுக்கிய பணம் முழுவதையும் இந்நிலம் பெறுவதற்கு வழங்கியிருந்தார். அவரது மேலான செயற்பாட்டிற்காக இந்நூற்றாண்டு விழாவில் அவரை நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

புலோலி, புற்றளை சாரதாபீட வித்தியாசாலை என்ற நாமத்துடன் அவதரித்த இப்பாடசாலை வராத்துப்பளை இந்து தனியார் தமிழ் கலவன் பாடசாலை எனவும் பெயர்பெற்று விளங்கி 01.07.1965 முதல் புற்றளை வித்தியாலயமாக மலர்ந்து 1968ஆம் ஆண்டு புற்றளை மகா வித்தியாலயமாக நாமம் பூண்டு இன்று தனது நூறாவது அகவையில் நிற்கும் வேளை தனது மைந்தர்களையும் விழாவைச் சிறப்பிக்க வருகை தந்த அனைத்து உயர்ந்த உள்ளங்களையும் கண்டு பேருவகை கொள்கின்றது.

இந்நூறாவது அகவையில் பாடசாலையின் ஆரம்பகர்த்தாக்கள், காணி வழங்கியோர், காலத்திற்குக் காலம் பௌதீக வளங்களை வழங்கியோர், வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அனைத்துள்ளங்களையும் பாடசாலைச் சமூகம் நன்றியுடன் நினைவுகூருகின்றுது.

இப்பாடசாலையில் அன்றிலிருந்து இன்றுவரை பின்வருவோர் அர்ப்பணிப்பான அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1) | திரு.ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை (சின்னையாச் சட்டம்பியார்) | 1916 - 1926 |
| 2) | திரு.ஐயம்பிள்ளை அருணாசலம் | 1924 - 1926 |
| 3) | திரு.வீரகத்திப்பிள்ளை | 1926 - 1929 |
| 4) | திரு.கந்தப்பர் சிவப்பிரகாசம் | 1929 - 1930 |
| 5) | திரு.வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை | 1930 - |
| 6) | திரு.கந்தப்பர் சிவப்பிரகாசம் | 1930 - 1937 |
| 7) | திரு.தம்பையா சிதம்பரப்பிள்ளை | 1937 - 30.04.19964 |
| 8) | திரு.திருநாவுக்கரசு கந்தசாமி | 01.05.1964 - 14.02.1966 |
| 9) | திரு.தம்பையா சிதம்பரப்பிள்ளை | 15.02.1966 - 01.06.1968 |
| 10) | திரு.நாகலிங்கம் நடராசா | 15.06.1968 -31.12.1970 |
| 11) | திரு. சின்னையா தர்மலிங்கம் | 01.01.1971 - 25.12.1987 |
| 12) | திரு. எட்வேட் ஜோஷ்வா | 25.12.1987 - 14.12.1992 |
| 13) | திரு. இராசா ஞானசேகரம்பிள்ளை | 17.02.1993 - 23.06.1994 |
| 14) | செல்வி. அன்னபாக்கியம் கனகரத்தினம் | 24.06.1994 - 19.02.1995 |
| 15) | திருமதி. சகுந்தலாதேவி இந்திரராசா | 20.02.1995 - 23.12.2004 |
| 16) | திரு. முருகேசு அனந்தேஸ்வரன் | 18.02.2005 - 06.10.2013 |
| 17) | திரு. ஆறுமுகம் சிவநாதன் | 14.10.2013 - இன்றுவரை |

இவ்வனைத்து அதிபர்களது சேவைகளையும் அவர்களுக்கு உறுதுணையாகப் பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகள், அலுவலர்கள் அனைவரையும் பாடசாலைச் சமூகம் நன்றியுடன் நினைவுகூருகின்றது

பாடசாலையின் வளர்ச்சியில் அன்று முதல் இன்றுவரை பக்கபலமாகச் செயற்பட்டுவரும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருவதுடன் பாடசாலையை வழிப்படுத்தி மேன்மைக்கு வழிவகுத்த கல்வி அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும் இந்நூற்றாண்டு விழாவில் வணங்கி வாழ்த்தி எனது 2015/2016 அறிக்கையை முன்வைக்கின்றேன்.

**மாணவர் விபரம் - 2015**

| **தரம்** | **ஆண்** | **பெண்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| 1 - 5 | 99 | 95 | 194 |
| 6 - 11 | 132 | 63 | 195 |
| 12 - 13 | 04 | 06 | 10 |
| | 235 | 164 | 399 |

**ஆளணி விபரம் - 2015**

| | |
|---|---|
| ஆசிரியர் தொகை | 39 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 15 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 23 |
| இணைப்பு ஆசிரியர்கள் | 01 |

குறிப்பு:- இடமாற்றம் பெற்றோர் எவரும் இல்லை.

வருகை தந்தோர் — 2015

1. திருமதி.சா.சிவசோமாஸ்குமார்
2. திருமதி.ரா.கிருபாகரன்
3. திருமதி.சி.விஜிதரன்

## கல்விசாரா ஊழியர்கள்

### வருகை தந்தோர்

1. திரு.இ.சுதர்சன்
2. திரு.ராகவன்

### இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

1. வே.சிவசுந்தரம்
2. திரு.பா.தெய்வேந்திரம்

## கல்விச் செயற்பாடுகள்

### 2015ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விபரம்

| பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 1. வீரசிங்கம் சபிஷன் | 179 |
| 2. ஜெயராசா கஜீபன் | 173 |
| 3. வீரபாகுதேவன் விதுசன் | 171 |
| 4. கிருஸ்ணரூபன் யதுஷிகா | 171 |
| 5. பத்மநாதன் திருமால் | 163 |
| 6. இந்திரன் பிருத்திகன் | 160 |
| 7. மோகனதாஸ் கஸ்தூரி | 155 |
| 8. கார்த்திகேசு மகிந்தன் | 153 |

## 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை – 2015

| | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோர் | 47 | 08 | 17.02 |
| 70 புள்ளிக்கு மேல் பெற்றோர் | 47 | 39 | 83.0 |

## க.பொ.த (சா/த) பரீட்சை – 2015

| பாடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| சைவநெறி | 26 | 26 | 100% |
| கிறிஸ்தவம் | 04 | 02 | 50% |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 30 | 23 | 76% |
| ஆங்கிலம் | 30 | 12 | 40% |
| விஞ்ஞானம் | 30 | 17 | 56% |
| கணிதம் | 30 | 15 | 50% |
| வரலாறு | 30 | 18 | 60% |
| வர்த்தகம் | 17 | 17 | 100% |
| புவியியல் | 13 | 02 | 15.4% |
| சங்கீதம் | ….. | ….. | ….. |
| சித்திரம் | 04 | 00 | 00% |
| நடனம் | 01 | 01 | 100% |
| இலக்கியநயம் | 22 | 18 | 81% |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | 12 | 12 | 100% |
| சுகாதாரம் | 18 | 15 | 83.3% |

2015ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் 8 பாடங்களுக்கு மேல் சித்திபெற்றோர்

| SER.NO | FULL NAME | RESULT |
|---|---|---|
| 01 | Jamestalan judo Konsikan | 8A, B |
| 02 | Vasantharaj Mathiyalagan | 7A, B, C |
| 03 | Indran Tusenika | 7A, B, C |
| 04 | Indran Kiruththika | 4A, 4B, C |
| 05 | Nanthakumar Kirushnabavani | 3A, 4B, C, S |
| 06 | Selvanayagam Tharaka | 3A, B, 3C, S |
| 07 | Niththiyananthan Nimanan | 2A, 4B, C, S |
| 08 | Sinnaththurai Silaxan | 2A, 2B, 4C, S |
| 09 | Jaganathan Suganya | 2A, 2B, C, 4S |
| 10 | Yogaanathan Dijinthan | A, 4B, C, 3S |
| 11 | Saravanabavan saajeekaran | A, B, 6C, S |
| 12 | Vigneswararasa Aravinthan | 2A, 3C, 3S |
| 13 | Satheeskumar Ashvini | A, 2B, 2C, 2S |
| 14 | Nageswarasarma Saruja | A, 3C, 5S |
| 15 | Kathirkamanathan Sayanthan | 3B, 5C, S |

க.பொ.த (உ/த) வகுப்பிற்குச் செல்வதற்குத் தகுதி பெற்றோர் – 2015

| தோற்றியோர் | சித்திபெற்றோர் | சித்திவீதம் |
|---|---|---|
| 30 | 15 | 50% |

## க.பொ.த (உ/த) – 2015
## சித்தியடைந்த மாணவர் விபரம்

1. சிவனேஸ்வரன் சஜிதா  A, 2B
2. பரமானந்தராசா கஜலட்சுமி  A, 2B
3. தெய்வேந்திரராசா வித்தியா  C, 2S

## க.பொ.த (உ/த) – 2015

| பாடம் | தோற்றியோர் | சித்திபெற்றோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| தமிழ் | 06 | 04 | 66.66% |
| இந்துநாகரிகம் | 06 | 05 | 83.33% |
| அரசியல் விஞ்ஞானம் | 06 | 04 | 66.66% |

## இணைப்பாட விதான செயற்பாடுகள்

### அகில இலங்கை தமிழ்மொழித் தினம் - 2015

| தொ இல | மாணவர் பெயர் | பிரிவு | நிகழ்வு | நிலை | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கோட்டம் | வலயம் | மாகாணம் |
| 01 | செ.நிதுஷா | 2 | கட்டுரை வரைதல் | 01 | 01 | |
| 02 | ப.கஜலம்சுமி | 5 | இலக்கியம் நயத்தல் | 04 | | |
| 03 | இ.கிருத்திகா | 4 | இலக்கணம் | 03 | | |
| 04 | சி.சஜிதா | 5 | இலககணம் | 01 | 01 | |
| 05 | ச.சஜிகரன் | 4 | குறுநாடக ஆக்கம் | 02 | | |
| 06 | இருஷேனிகா | 4 | கவிதை ஆக்கம் | 03 | | |
| 07 | ய.கொன்சிகள் | 4 | சிறுகதையாக்கம் | 04 | | |
| 08 | ச.அதுர்ஷா | 3 | கட்டுரை வரைதல் | 01 | 01 | |
| 09 | சி.சந்தியா | 2 | பேச்சு | 01 | 03 | |
| 10 | வி.கோபிரமணன் | 02 | பாவோதல் | 01 | | |
| 11 | ச.ஹரிணி | 03 | பாவோதல் | 03 | 03 | |
| 12 | சி.டிசாந்தன் | 4 | பாவோதல் | 03 | 02 | |
| 13 | ச.டர்மிகா | 2 | இசையும் அசைவும் | 02 | 02 | |

| தொ இல | மாணவர் பெயர் | தரம் | நிலை | | |
|---|---|---|---|---|---|
| | | | கோட்டம் | வலயம் | மாகாணம் |
| 01 | பூ.டேனுபிரநதி | 02 | 01 | 02 | 01 |
| 02 | வ.மதிமறவன் | 02 | 02 | | |
| 03 | இ.தனஞ்சயன் | 04 | 01 | | |
| 04 | ஜெ.அபிசன் | 05 | 02 | | |

## DIVISION LEVEL ENGLISH LANGUAGE AND DRAMA COMPETITIONS – 2015

| S. No | NAME | GRADE | EVENT | PLACE | |
|---|---|---|---|---|---|
| | | | | Division | Zoonal |
| 01 | S.Nikashini | 05 | Copywriting | 02 | 01 |
| 02 | S.Sutharjana | 04 | Recitation | 03 | |
| 03 | V.Gobiramanan | 07 | Creative writing | | |
| 04 | S.Harini | 08 | Creative writing | 01 | |
| 05 | M.Vijitha | 08 | Creative writing | 02 | |
| 06 | S.Athursha | 08 | Copywriting | 03 | |
| 07 | I.Rukshiya | 10 | Copywriting | 01 | |
| 08 | P.Thulasika | 06 | Dictation | 01 | |
| 09 | S.Harini | 08 | Dictation | 01 | |
| 10 | S.Athursha | 08 | Dictation | 03 | |
| 11 | R.Tharani | 10 | Dictation | 03 | |
| 12 | L.Nitharsan | 12 | Copywriting | 02 | |
| 13 | S,Nathusha | 13 | Copywriting | 01 | |

மெய்வல்லுநர் போட்டி – 2015

| தொ .இல | மாணவர் பெயர் | பிரிவு | நிகழ்வு | நிலை | |
|---|---|---|---|---|---|
| | | | | கோட்டம் | வலயம் |
| 01 | நி.உமணன் | 13 வயது | நீளம் பாய்தல் | 03 | |
| 02 | ஜெ.திலக்ராஜ் | 13 வயது | உயரம் பாய்தல் | 04 | |
| 03 | க.கயாநிதி | 13 வயது | 100m | 04 | |
| 04 | யோ.ரம்யா | 15 வயது | ஈட்டி | 01 | |
| 05 | சூ.சுகிர்தன் | 15 வயது | ஈட்டி | 01 | |

செயற்பட்டு மகிழ்வோம் கோட்ட மட்ட விளையாட்டு – 2015

தரம் - 03 2ஆம் இடம்

மாணவர் பெயர்

1. த.அபிசாளினி
2. க.நிலக்ஷிகா
3. க.கேலினி
4. யோ.சாருமதி
5. கு.டர்மிகா
6. சா.தனுசி
7. த.சேர்லினாமேரி
8. ய.கௌசிகன்
9. கி.மகீபன்
10. நெ.வனுஜன்
11. த.நிகாஷ்
12. பா.பாருஜன்
13. வி.அபிராம்
14. வி.யதுஜன்

## உள்ளக விளையாட்டுக்கள் - 2015

15 வயது ஆண்கள் - Caram வலய மட்டப் போட்டியில் முதலாம் இடம்

1. சி.கிருத்திகன்
2. வ.மதிவர்மன்
3. பா.கோபிதன்
4. கி.மனோபா
5. ப.விதுர்ஷன்
6. யோ.சாயிதன்

( மாகாணம் சென்றனர்)

19 வயது ஆண்கள் - Caram வலய மட்டப் போட்டியில் முதலாம் இடம்

1. ம.யசோதன்
2. ச.விதுஷன்
3. ய.கொன்ஷிகன்
4. யோ.சயந்தன்
5. அ.சயிந்தன்

( மாகாணம் சென்றனர்)

19 வயது ஆண்கள் - பூப்பந்து வலய மட்டப் போட்டியில் மூன்றாம் **இடம்**

1. து.கவீனன்
2. நா.ஸ்ரீவிசாகசர்மா
3. ந.கபிலன்
4. செ.விமல்ராஜ்
5. ர.கணேஷ்
6. ஜெ.கஜிந்தன்
7. ச.அன்ரனிநிதர்சன்
8. ய.கொன்ஷிகன்
9. ம.சதீஸகுமரன்

(மாகாணம் சென்றனர்

### கோட்ட மட்ட திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மனனப் போட்டி 2015

| தொ.இல | மாணவர் பெயர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 01 | நா.டிலக்ஷனா | 01 | 02 |
| 02 | பூ.டேனுபிரநதி | 02 | 02 |
| 03 | கி.யதுமிதா | 04 | 01 |
| 04 | கி.யதுஷிகா | 05 | 01 |

### கோட்டமட்ட சதுரங்க சுற்றுப் போட்டி – 2015

| தொ.இல | மாணவர் பெயர் | பிரிவு | நிலை |
|---|---|---|---|
| 01 | வீ.காவியன் | 8 வயது | 03 |
| 02 | பி.காநிலவன் | 8 வயது | 06 |
| 03 | த.நிகாஷ் | 8 வயது | 09 |
| 04 | ஜெ.நிவேதிகன் | 10 வயது | 07 |
| 05 | க.சாரங்கன் | 10 வயது | 09 |
| 06 | ர.சுபோதனன் | 16 வயது | 10 |
| 07 | வே.கோகுலரூபன் | 14 வயது | 10 |

### கோட்ட மட்ட சமூகவிஞ்ஞானப் போட்டி – 2015

| தொ.இல | மாணவர் பெயர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 01 | சு.ராம்சியாஸ் | 07 | 03 |
| 02 | ச.அதுர்ஷா | 08 | 02 |

### வலய மட்ட சைவநெறிப் போட்டி – 2015

| தொ. இல | மாணவர் பெயர் | பிரிவு | நிகழ்வு | நிலை |
|---|---|---|---|---|
| 01 | சி.சிலக்ஷன் | 03 | புராணபடனம் | 02 |
| 02 | நி.நிமணன் | 03 | புராணபடனம் | 02 |
| 03 | சி.டிசாந்தன் | 01 | கதாப்பிரசங்கம் | 02 |

### வலய மட்ட வணிகப் போட்டி – 2015

| மாணவர் பெயர் | பிரிவு | தரம் | நிலை |
|---|---|---|---|
| ர.ஜதுர்ஷா | 01 | 10 | 03 |

கோட்ட மட்ட சிததிரப் போட்டி – 2015

| மாணவர் பெயர் | தரம் | தரம் |
|---|---|---|
| ஜெ.கஜீபன் | 02 | 10 |

புத்தாக்கப் போட்டி – 2015

| தரம் | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| 09 | வ.மதிவர்மன் | வலயத்திலிருந்து மாகாணமட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர் |
| 09 | ப.விதுஷன் | |

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான போட்டி – 2015

| மாணவர் பெயர் | போட்டி விபரம் | நிலை |
|---|---|---|
| சு.யாழினி | சித்திரம் | 02 |
| இ.புவிர்தராஜ் | சித்திரம் | 01 |

**மன்றச் செயற்பாடுகள்**

மாணவர்களது பல்வேறு ஆற்றல்களைக் கண்டறியவும் அவற்றினை வளப்படுத்தவும் பல்வேறு துறைசார்ந்த மன்றச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகையில்

1. ஆரம்பப் பிரிவு
2. தரம் 6 – 9 வரையான பிரிவ
3. தரம் 10 – 11 வரையான பிரிவு
4. உயர்தர மாணவர் பிரிவு

என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன. இதில் தமிழ் மன்றம், கணித விஞ்ஞான மன்றம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம், சுகாதார மன்றம், சமூக விஞ:ஞான மன்றம், ஆங்கில மன்றம் என்பன சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. இம்மன்றங்கள் ஒவ்வொன்றும் தமது பாடம், துறை சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் அதேவேளை இந்து, கிறிஸ்தவ மன்றங்கள் வெள்ளிக்கிழமை தோறும் சமயப் பிரார்த்தனையை நடாத்துவதோடு சமூக ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. இந்து மன்றம் மேலதிக செயற்பாடுகளாக நாயன்மார்களது குருபூசைத் தினங்கள், நவராத்திரி விழா

என்பவற்றைச் சிறப்பாக நடாத்தி வருவதுடன் நவராததிரி காலங்களில் மாணவர்களிடையே கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் கட்டுதல் ஆகிய போட்டிகளை நடாத்தி மாணவர்களது சமூக விழுமியப் பண்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. அதேபோன்று கிறிஸ்தவ மன்றமும் சமயப் பண்பாடுகளைப் போதித்து வருவதுடன் ஒளிவிழா போன்ற சமய நிகழ்வுகளையும் சிறப்பாக நடாத்தி வருகின்றது. இவற்றை விட மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரை உள்ளடக்கிய சிறுவா உரிமைப் பாதுகாப்பு மன்றம் செயற்பட்டு வருகின்றது. மேலும், மாணவர்களது வரவொழுங்கினைப் பேணுவதற்காக கட்டாயக் கல்விக் குழுவும் செயற்பட்டு வருகின்றது. தற்போது இலங்கை முதலுதவிச் சங்கமும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பாடசாலை அபிவிருத்திக்குழு**

பாடசாலையின் மேம்பாட்டுச் செயற்பாட்டில் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயற்பாடு பாராட்டுதற்குரியதாகும். தற்போது பாடசாலையின் :வருடாந்த திட்டமிடல், ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்தல், செயற்பாடுகளில் பங்களிப்பினை வழங்குவதுடன் மாதாந்த மீளாய்வுக் கூட்டத்தின்போது பாடசாலையின் சகல செயற்பாடுகள் தொடர்பாகவும் அலசி ஆராய்வதுடன் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான அனுமதிகளையும் வழங்கி வருகின்றது. அத்துடன் காலை உணவு வழங்கும் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு மேற்பார்வை, ஆலோசனை, பங்களிப்பு என்ற எல்லா வகையிலும் தனது பங்களிப்பை ஆற்றிவருகின்றமை பாராட்டுதற்குரியதாகும். இவற்றுக்கு மேலாக ஒவ்வொரு தவணை ஆரம்பத்திலும் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முதல்நாள் பெற்றோர்களில் பெரும்பாலானோர் வருகை தந்து சிரமதானத்தில் ஈடுபட்டு பாடசாலையின் சுத்தம் சுகாதாரத்தைப் பேணுவதில் ஆற்றிவரும் பங்களிப்பு மகத்தானதாகும்.

2015ஆம் ஆண்டு பின்வரும் அரசாங்க நிதி ஒதுக்கீடுகள் மூலம் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டன.

| விபரம் | தொகை |
|---|---|
| பெரிய தேவனததாய் முன்பள்ளி | 141432.20 |
| புற்றளை சித்திவிநாயகர் முன்பள்ளி | 91488.80 |
| புற்றளை சித்திவிநாயகர் முன்பள்ளி | 94621.00 |
| புற்றளை மகாவித்தியாலயம் (மலசலகூட மாபிள்) | 71079.00 |
| பெரிய தேவனத்தாய் முன்பள்ளி (கட்டிட நிர்மாணம்) | 457499.10 |
| புற்றளை ம.வி (சைக்கிள் தரிப்பிடம்) | 94538.30 |
| பெரிய தேவனத்தாய முன்பள்ளி | 377478.84 |

**பழைய மாணவர் சங்கம்**

எமது பாடசாலையின் வினைத்திறன் மிக்க வளமாக பழைய மாணவர் சங்கமும் செயற்படுகின்றது. பழைய மாணவர் சங்கத்தின் தாய்ச்சங்கம் தற்போது விறுவிறுப்பாகச் செயற்பட்டு வருகின்னறது. பாடசாலையின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடாத்த வேண்டும் என்பதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களின் அனுசரணையைப் பெற்று ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தியமை மகிழ்வுக்கும் பாராட்டுக்கும் உரியதொன்றாகும். அதேவேளை கனடா பழைய மாணவர் சங்கம், அவுஸ்திரேலிய பழைய மாணவர் சங்கம், இலண்டன் பழைய மாணவர் சங்கம் ஆகியனவும் இணைந்து பாடசாலையின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டுக்கு தமது பங்களிப்பினை ஆற்றிவருகின்றமை மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்குமுரிய விடயமாகும். அவுஸ்திரேலிய பழைய மாணவர் சங்கம் பின்வரும் நிதி அனுசரணையை இவ்வாண்டு வழங்கியுள்ளனர்.

- நவராத்திரி விழா பரிசில் கொள்வனவுக்கான செலவு
- மேலதிக மின்சாரக் கட்டணம்
- சுகாதாரத் தொழிலாளிக்குரிய வேதனம்
- 13 வயதுப்பிரிவு வீர, வீராங்கனைக்கான பணப் பரிசில்
- தரம் 3, தரம் 5 நல்லொழுக்க மாணவருக்கான பணப் பரிசில்
- நூலகத்திற்கான ஆங்கில நூல்கள்
- தகவல் தொழிநுட்ப உதவியாளருக்கான ஊக்குவிப்பு நிதி
- நூற்றாண்டு விழாவிற்கான பங்களிப்பாக 300,000.00

கனடா பழைய மாணவர் சங்கம் நூற்றாண்டு விழா பரிசளிப்பு விழாவினை முன்னிட்டு 200,000.00 ரூபாவினை வழங்கியுள்ளனர். இலண்டன் பழைய மாணவர் சங்கம் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 3,15000.00 பெறுமதியான புத்தகப்பைகளை வழங்க முன்வந்துள்ளனர்.

அத்துடன் தாய்ச்சங்கம் உள்நாட்டு பழைய மாணவர்களின் அனுசரணையைப் பெற்று நூற்றாண்டு விழாவுக்கான நிதி அனுசரணையை வழங்க முன்வந்துள்ளனர். மேலும், மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைக்காக பின்வரும் நிதி அனுசரணைகளையும் வழங்கியுள்ளனர்.

- மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான ஆறுதல் நிறுவனத்தின் வினாத்தாள்கள் கொள்வனவுக்கான நிதி.
- க.பொ.த (சா/த), தரம் - 05 மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்கான காகிதாதிகள்.

இவ்வாறு பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் பங்குகொண்டு தோளோடு தோள் நின்று பங்காற்றிவரும் பழைய மாணவர் சங்கத்தினருக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் தொடர்ந்து அவர்களின் பங்களிப்பும் அனுசரணையும் ஆதரவும் கிடைக்கவேண்டுமென வேண்டிக்கொள்கின்றேன்.

**சாதனைகள்**

2015ஆம் ஆண்டு பாடசாலையின் செயற்பாட்டில் முக்கிய சாதனைகளை நினைவு கூருவது பொருத்தமானதாகும். 2015ஆம் ஆண்டு தரம் 2ஐச் சேர்ந்த செல்வி.பூ.டேனுபிரநதி விரைவு கணிதப் போட்டியில் பருத்தித்துறை கோட்ட மட்டத்தில் 1ஆம் இடத்தையும் வடமராட்சி வலய மட்டத்தில் 2ஆம் இடத்தையும் வடமாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தையும் பெற்று சாதனை படைத்தமை பாராட்டுக்குரியதாகும்.

அதேபோன்று 2015 க.பொ.த (சா/த) பரீட்சையில் எமது பாடசாலை மாணவன் யமேஸ்ரலன் யூடோ கொன்சிகன் 8A யும் 1B யும் பெற்றுக்கொண்டமை மகிழ்வுக்குரிய சாதனையாகும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய 30 பேரில் க.பொ.த (உ/த) வகுப்புக்குத் தகுதி

பெற்ற 15 பேரும், 9 பாடத்திலும் சித்தியடைந்தமை பாராட்டுக்கும் மகிழ்வுக்குமுரிய விடயமாகும்.

அதேபோன்று க.பொ.த (உ/த) பரீட்சைக்கு 6 பேர் தோற்றி 3 பேர் சித்தியடைந்ததுடன் செல்வி.சிவனேஸ்வரன் சஜிதா இசற் புள்ளி 1.5594 பெற்றும் செல்வி.பரமானந்தராசா கஜலட்சுமி இசற்புள்ளி 1.3007 பெற்றும் பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பைப் பெற்றமை பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

5ஆம்தர புலமைப் பரிசில் பரீட்சையில் 8 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ள போதும் பரீட்சைக்குத் தோற்றிய 47 மாணவர்களில் 39 பேர் 70 புள்ளிகளுக்கு மேல்பெற்று சாதனை படைத்துள்ளமையும் பாராட்டுக்கும் மகிழ்வுக்கும் உரிய விடயமாகும். இச்சாதனைகளுக்கு உந்துசக்தியாக அமைந்து வழிகாட்டிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கு எனது மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கான சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் எமது பாடசாலைக்கு வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டு வடமாகாண கல்வித் திணைக்களத்தால் கௌரவிக்கப்பட்டமை பாடசாலைக்குப் பெருமை தரும் விடயமாகும். இவ்வகையில் சுகாதார மேம்பாட்டை உறுதிப்படுத்திய சுகாதாரக் கழகம் மற்றும் சுற்றாடல் கழகம் ஆகியவற்றின் மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொளகின்றேன்.

மேலும், பாடசாலைகளுக்கிடையிலான நூலக கற்றல் வளநிலையங்களின் மேம்பாடு தொடர்பான போட்டியில் 1C வகைப் பாடசாலைகளுக்கிடையில் எமது பாடசாலை வலய மட்டத்தில் 1ஆம் இடத்தையும் மாகாண மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றமையால் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்டு ரூபா 15000.00 பணப்பரிசிலும் வெற்றிச் சான்றிதழும் வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டமை பாடசாலைக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும். இவ்வகையில் முன்னின்று உழைத்த எமது நூலக ஆசிரியை திருமதி.கலாறஞ்சினி கிருபாகரனின் அர்ப்பணிப்பும் சேவையும் பாராட்டுக்குரியதாகும். 2014/2015 தேசிய உற்பத்தித் திறன் போட்டியில்

நாம் பங்குபற்றியபோது முதலாம் சுற்றில் தெரிவுசெய்யப்பட்டு இரண்டாம் சுறறில் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டு வெற்றிபெற வாழ்த்தியமை முக்கிய சாதனையாகும்.

**நூலக அபிவிருத்தி**

எமது பாடசாலையில் அமைந்துள்ள நூலகமும் கற்றல்வள நிலையமும் உயிர்த்துடிப்பு மிக்க அங்கமாகவும் பண்பாட்டுச் சின்னமாகவும் மாணவரிடம் சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தும் இடமாகவும் விளங்குகின்றது. இந்நூலகம், “நூலக கற்றல் வளங்களின் உச்சப் பயன்பாட்டினூடாக அறிவும் ஆற்றலும் மிக்க மாணவர் சமுதாயம்” என்ற தூரநோக்கின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது. இந்நூலகத்தில் நூல்களின் எண்ணிக்கையை அதிகரிக்க் வேண்டும் என்று மேற்கொண்ட முயற்சியின் பயனாக 2012ஆம் ஆண்டு 1658ஆக் காணப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 2016ஆம் ஆண்டு 2888 ஆக அதிகரித்துள்ளது. இவ்வகையில் 30.11.2015இல் கொழும்பு “தோதன்ன” நூல் வெளியீட்டு நிறுவனத்தினால் 18 நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. 27.04.2016இல் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்துசமயம் மற்றும் தமிழ் இலக்கியம் சார்ந்த 17 நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இவ்விடயத்தில் பாடசாலையின் பழைய மாணவர் சங்க அவுஸ்திரேலிய கிளையினர் காத்திரமான பங்களிப்பை நல்கிவருகின்றனர். 15.09.2015இல் Britannica – Micropeadia 1 தொடக்கம் 12 வரையான தொடர்களையும், 48 ஆங்கில சிறுவர் கதை நூல்களையும் அனுப்பியிருந்தனர். இவ்வருடம் Britannica – Micropeadia 13 தொடக்கம் 29 வரையான 16 தொடர்களையும் வழங்கியிருந்தனர். இது மாணவர்களின் ஆங்கில மொழியறிவு விருத்திக்கும் தகவல் தேடலுக்கும் உந்துசக்தியாக அமைந்தது. இவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், 09.03.2016 தனது பிறந்தநாளுக்காக தரம் 11ஐச் சேர்ந்த மாணவன் து.கவீனன் ரூபா 10,000.00 ஐயும் 10.03.2016 தரம் 7ஐச் சேர்ந்த மாணவன் க.பிரசாந் ரூபா 1000.00ஐயும் நூலகத்திற்கு வழங்கியமை பாராட்டுக்குரியதாகும். இவ்வகையில் எமது நூலகம் 2015ஆம் ஆண்டு வடமாகாண 1C வகைப் பாடசாலைகளுக்கிடையில் 2ஆம் இடத்தைப் பெற்றமை பாராட்டுக்கும் மகிழ்வுக்குமுரிய விடயமாகும்.

## மாணவர்களுக்கான ஊக்குவிப்புக்கள்

மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை ஊக்குவிப்பதற்காக நெல்லியடி சனசமூக நிலையம் கனடாவாழ் உறவுகளின் நிதி அனுசரணையுடன் 2014ஆம் ஆண்டு வைகாசி மாதம் தொடக்கம் மாதந்தோறும் தலா 1000.00 ரூபா வீதம் 6 மாணவர்களுக்கு வழங்கிவந்து 2016 தைமாதம் முதல் 10 மாணவர்களாக தொகையை அதிகரித்து இவர்களுக்கு பகிர்ந்து வழங்குவற்காக மாதந்தோறும் 9500.00 ரூபாவை வழங்கி கற்றல் செயற்பாட்டிற்கு ஆதரவுநல்கி வருகின்றார்கள். இந்நடலடிக்கையை மேற்கொள்ளும் நெல்லியடி சனசமூக நிலையத்தினருக்கும் கனடா, இலண்டன் வாழ் உறவுகளுக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், மாணவர்களின் கற்றலை ஊக்குவிப்பதற்காக நெல்லியடி, பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான திரு.நா.பாஸ்கரன் அவர்கள் 2014ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் தலா 100.00 ரூபா வீதம் 11 மாணவர்களுக்கு வழங்கி வருகிறார். அவரது உயர்ந்த செயற்பாட்டிற்காகவும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது பாடசாலையின் பழைய மாணவனாகிய திரு.கண்ணதாசனின் நினைவாக அவரது நண்பர்கள் 2015ஆம் ஆண்டு 5ஆம்தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் வெற்றிக் கிண்ணங்களை வழங்கி கௌரவித்ததுடன் 5ஆம்தர மாணவர்கள் அனைவருக்கும் பாதணிகளை வழங்கி அவர்களது கற்றல் செயற்பாட்டிற்கு ஆதரவு வழங்கியிருந்தனர். இவர்களது முன்னுதாரணமான செயற்பாட்டிற்காக பாடசாலைச் சமூகத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், திருமதி. குலேந்திரராசா அவர்கள் தனது பிறந்தநாளை முன்னிட்டு வழங்கிய ரூபா 10,000.00ஐ பயன்படுத்தி 10 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டன. இவரது முன்மாதிரியான உயர்ந்த செயற்பாட்டிற்காகவும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டிற்காக தரம் 3, 5 ஆகியவற்றில் தலா ஒவ்வொரு மாணவருக்கு 5000.00ரூபா வீதம் 10,000.00 ரூபா பணப்பரிசிலை வழங்குவதோடு, மாணவர்களின் விளையாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு விளையாட்டில் முன்னிலை வகிக்கும், 13 வயதுப் பிரிவைச் சேர்ந்த வீர, வீராங்கனைக்குரிய பணப்பரிசிலாக தலா 10,000.00 ரூபா வீதம 20,000.00 ருபாவை வழங்கிவரும் அவுஸ்திரேலிய பழைய மாணவர் சங்கத்தினருக்கும் எமது பாராட்டுக்கயையும் நன்றிகளையம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக தரம் 2 தொடக்கம் தரம் 11 வரை கற்றல் ஊக்கிகளைப் பெறுவதற்காக 30177.00 ரூபாவையும் க.பொ.த (சா/த) மற்றும் 5ஆம்தர மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக காகிதாதிகளையும் வழங்கிய பழைய மாணவர் சங்கத்தின் தாயச்சங்கத்தினருக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக 2016ஆம்ஆண்டு 10 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிய வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்திற்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பௌதீக வள அபிவிருத்தி**

பாடசாலையின் கற்றல் மேம்பாட்டிற்கு பௌதீக வள அபிவிருத்தியும் முக்கியமானதாகும். இவ்வகையில் ஆசிரியர்களுக்கான மோட்டார் சைக்கிள் தரிப்பிடம் அமைப்பதற்காக 2015ஆம் ஆண்டு கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர் திரு.வே.சிவயோகன் அவர்கள் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு – 2015இன் கீழ் 100,000.00 ரூபாவை ஒதுக்கித் தந்ததுடன் அது அமைக்கப்பட்டு இவராலேயே திறந்தும் வைக்கப்பட்டது. இத்தகைய செயற்பாட்டினை மேறகொண்ட கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.வே.சிவயோகன் அவர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்ததாக எமது பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்தின் முடிவுறுத்தப்படாதிருந்த மேற்றளப்பகுதி வேலைகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் 2015ஆம் ஆண்டு முடிவுறுத்தப்பட்டு 10.02.2016 அன்று கௌரவ மாகாணசபை உறுப்பினர்களான திரு.ச.சுகிர்தன், திரு.க.தர்மலிங்கம், திரு.M.K.சிவாஜிலிங்கம், திரு.வே.சிவயோகன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான நிதி ஒதுக்கீட்டினை வழங்கிய கௌரவ மாகாணசபை உறுப்பினர்களுக்கும் செயற்பாட்டினை நிறைவேற்றித் தந்த வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.நந்தகுமார் அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு எமது பாடசாலை புதுப்பொலிவு பெறவேண்டும் என்ற பேரவாவினால் எடுத்த முயற்சியின் காரணமாக முதலில் பழைய கட்டிடங்களை அகற்றி புதிய கட்டிடங்களின் அமைப்புக்கு வழிசமைத்த பழைய மாணவர் சங்கத்தினருக்கும், சரீர உதவி வழங்கிய பழைய மர்ணவ இளைஞர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வகையில் பழைய "ப" வடிவ மண்டபம் அமைந்திருந்த இடத்தில் 9 மில்லியன் ரூபா செலவில் அதே வடிவில் நிர்வாகத் தொகுதியையும் கணினிக் கூடத்தையும் அமைத்துத்தர முன்வந்த திரு.கந்தப்பர் கணபதிப்பிள்ளை குடும்பத்தினர் 23.03.2016 அன்று அடிக்கல் நாட்டி மிகக் குறுகிய காலத்தில் கட்டிட வேலைகளை நிறைவுசெய்து இந்நூற்றாண்டு விழாவில் அதனைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்தமை ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. அவர்களது மேலான செயற்பாட்டிற்காக பாடசாலைச் சமூகம் தலைசாய்த்து தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

